எலக்ட்ரிசிடி, கோக், டீசல், வாட்டர் ஆகியவை ஒன்றையொன்று இணைந்த செல்வங்கள். ஒன்று இல்லையென்றால் இன்னொன்று கட்டாயம் பாதிக்கப்படும். அந்த வகையில் தனிச் சலுகை அளிக்க வேண்டுமென்று மத்திய சர்க்காரை மாநில அரசு நிச்சயமாக வற்புறுத்தும்.

(4) அரசினர் சட்ட முன்வடிவு

தமிழ்நாடு 1973-ம் ஆண்டு, இந்து சமய அறக்கட்டளைகள் (திருத்த) சட்ட முன்வடிவு

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தமிழ்நாடு, 1973-ம் ஆண்டு, இந்து சமய அறக்கட்டளைகள் (திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவர் அவர்களே, இச்சட்ட முன் வடிவை அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பட்டிருக்கின்றது.

(5) 1973-74-ம் ஆண்டுக்கான நிதிக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

நிதிக் கோரிக்கை எண் 31—பாசனம்.

நிதிக் கோரிக்கை எண் 32—பொதுப்பணிகள்—பணிகள்.

நிதிக் கோரிக்கை எண் 33—பொதுப்பணிகள்—பணியாளரும், கருவிகளும், இயந்திரச் சாதனங்களும்.

நிதிக் கோரிக்கை எண் 46—பாசன மூலதனச் செலவு.

நிதிக் கோரிக்கை எண் 47—பொதுப்பணிகள் மூலதனச் செலவு.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்கீழ் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்—

"நிதிக் கோரிக்கை எண் 31—பாசனம் என்ற தலைப்பின்கீழ் ரூ. 15,55,43,600-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

DR. H. V. HANDE: Sir, I move the following cut motion to discuss policy—

"That the allotment of Rs. 15.55.43.600 under Demand No. 31--Irrigation be reduced by Rs. 100".